இருக்கிறது. What is Victimisation ? தொழிலாளி தனக்குப் பிடிக்காத தொழிற்சங்கத்தைச் சார்ந்தவன் என்ற காரணத்திற்காக முதலாளி அவனை வேலையை விட்டு நீக்குவது— 'Punishment imposed is disproportionate to the offence that is said to have been committed. செய்ததாகக் கூறப்படுகிற குற்றத்திற்கு தண்டனை அதிகமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பது இரண்டாவது. இவைகள்தான் பழிவாங்குதல் என்பதாகும். வேலையை விட்டு நீக்குவது, சஸ்பென்ஷன் செய்வது எல்லாம் பழி வாங்குவது அல்ல என்று தெளிவாக வழக்கு மன்றத் தீர்ப்பு இருக்கிறது என்று சொல்லிக் கொள்கிறேன்.

*635 வினா—மாண்புமிகு திரு. சி. கோவிந்தராசன்: தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) பாடி டி.வி.எஸ். நிறுவனங்களிலுள்ள தொழிலாளர்களின் உண்மையான தொழிற்சங்கப் பிரதிநிதிகள் யார் என்பதை முடிவு செய்ய தேர்தல் நடைபெறும் என்று அரசினால் கூறப்பட்டதா ?

(ஆ) ஆம் எனில், தேர்தல் எப்போது நடைபெறும்?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை. ஆனால் இந் நிறுவனங்களில் நடந்த தொழில் தகராறுகள்மீது ஏற்பட்ட உடன்பாடுகளில் சங்க நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்தல் அல்லது விருப்பப்பட்டு சேர்த்தல் இவைகளில் உள்ள கருத்து வேறுபாடுகளை நல்ல முறையில் தீர்ப்பதற்குத் தொழிலாளர் நல இலாக்கா ஆராய்ந்து தகுந்த ஏற்பாடுகளை முறைப்படுத்தும் என்று உள்ளது.

(ஆ) நீதிமன்றத்தில் நிலுவையிலுள்ள வழக்குகள் முடிந்த பிறகு தேவை இருப்பின் இதுபற்றி நடவடிக்கை உரிய காலத்தில் எடுக்கப்படும்.

திரு. சி. கோவிந்தராசன் : பாடி டி.வி.எஸ். நிறுவனத்தில் இப்படிப்பட்ட தொழிற் தகராறுகள் நடந்து கொண்டிருந்தபோது இந்த மன்றத்திலே முதலமைச்சர் அவர்கள் கூறினார்கள்—இந்தத் தொழிற்சங்கத்தில் யார் தலைவராக ஆக்கப்படுவது என்பது ரகசிய வாக்கெடுப்பின் மூலம் அமைதி நிலவும்போது செய்யப்படும் என்ற அறிவிப்பை இந்த மன்றத்தில் கூறினார்கள். இரண்டு மூன்று நாட்களுக்கு முன்னதாகத் தொழிலாளர் நல அமைச்சர்கூட அங்கு அமைதி நிலவுவதாகச் சொன்னார்கள். இப்போது ஒரு

1978 மார்ச் 20]

நிமிஷத்திற்கு முன்னால் கூட அங்கு அமைதி நிலவுவதாக அமைச்சர் சொல்லுகிறார்கள். அப்படி அமைதி நிலவும்போது தொழிற் சங்கத் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை ?

[முற்பகல் 9.50]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : பேரவைத் தலைவரவர்களே, உடன்பாட்டில் தேர்தலைப்பற்றிச் சொல்லியிருப்பதை இப்பொழுது படிக்கிறேன்—

"வேலை திரும்பத் தொடங்கிய பிறகு, சங்க நிர்வாகிகளை தேர்ந்தெடுத்தல் அல்லது விருப்பப்பட்டு சேர்த்தல் இவைகளில் உள்ள கருத்து வேறுபாடுகளை நல்லமுறையில் தீர்ப்பதற்கு தொழிலாளர் நல இலாக்கா ஆராய்ந்து தகுந்த ஏற்பாடுகளை முறைப்படுத்தும்."

இதுதான் ஒப்பந்தத்தில் கூறப்பட்டுள்ளது. இதில் பிரச்னை என்னவென்றால், அந்தத் தொழிற்சங்கத் தலைவர், சி.ஐ.டி.யூ.வைச் சேர்ந்தவர், தேர்தல் முறையாக நடத்தப்பெற்று சென்றவர் அல்ல. தலைவர் இராஜினாமா செய்ய, இவர் இணைப்பு முறையில், அதாவது கோவாப்ஷன் என்ற முறையில் சென்றவர், ஒட்டுமொத்தமாக தொழிலாளர்களின் ஆதரவு பெற்றுச் சென்றவர் என்று சொல்ல முடியாது, கோவாப்ஷன் மூலமாகச் சென்றார். அப்படி அவர் தலைவராக வந்தது சரியாகாது என்று சிவில் சூட் நடந்து கொண்டிருக்கிறது. அப்படி நடந்து கொண்டிருக்கும் பொழுது தேர்தலை வைத்தால் சப்ஜுடீஸ் ஆக வரலாம். அந்தத் தொழிற்சங்கத்தைச் சேர்ந்த அவர்கள்தான் இந்த நடவடிக்கையில் இனிஷியேட் செய்ய முடியும். நாமாகத் தலையிட முடியாது. இரகசிய முறையில் தேர்தலை நடத்த தொழிலாளர் இலாக்கா முன்வர வேண்டும் என்றால் அந்தத் தொழிற்சங்கம் கடிதம் எழுத வேண்டும். ஒரேயொரு தொழிற்சங்கம்தான் இருக்கிறது. அவர்களிடமிருந்து கடிதம் வரவில்லை. Trade Union Act of 1926, செக்ஷன் 10, பிரகாரம் அந்த டிரேடு யூனியனின் ரெஜிஸ்ட்ரேஷனை ரத்து செய்ய முடியும். அப்படியொரு முயற்சி சட்டமன்றத்தில் எழுப்பப்படுகின்றதே தவிர தொழிலாளர் பிரதிநிதிகளிடமிருந்து, இருக்கின்ற ஒரேயொரு தொழிற்சங்கத்திடமிருந்து எங்களுக்கு முறையீடு வரவில்லை. அவர்கள் அமைதியாக வேலை செய்து கொண்டிருக்கிறார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : மாண்புமிகு தலைவரவர்களே, தொழிலாளர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தங்களுடைய தலைவர்களைத் தேர்ந்தெடுத்தாலும் இந்த டி.வி.எஸ். நிறுவனங்களில்,

[1978 மார்ச் 2)

கிளேட்டன், லூக்காஸ், பிரேக்ஸ் இந்தியா போன்ற இடங்களில் அவர்கள் விரும்புகின்ற தலைவர் இல்லை என்றால் அங்கீகரிப்பது இல்லை என்று சொல்லப்படுவது அரசாங்கத்திற்குத் தெரியுமா? தொழிலாளர்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்களை அந்த நிர்வாகம் அங்கீகரிக்க வேண்டிய அவசியமில்லை என்று அரசாங்கம் கருதுகிறதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே, அப்படியொரு புகார் இதுவரையில் வரவில்லை. இப்பொழுது பிரச்னை எழுப்பும் தலைவர் கோவாப்ஷன் மூலம் சென்றவர், சீக்ரெட் பேலட் மூலமோ, கைதூக்குவதன் மூலமோ தேர்ந்தெடுக்கப்பட்டவர் அல்ல.

திரு. சி. கோவிந்தராஜன்: தலைவரவர்களே, அந்தச் சங்கத்தினுடைய விதிமுறைகளில் கோவாப்ஷன் மூலமாகத் தலைவர் போகலாம் என்று இருந்த காரணத்தால்,—இன்றைக்கும் அப்படி இருப்பதால், அது இன்னும் திருத்தப்படவில்லை—அந்தத் தலைவர் கோவாப்ஷன் மூலம் சென்றார். இப்பொழுதுள்ள பிரச்னை என்னவென்றால் இந்தப் பிரச்னைக்குப் பிறகு அதனால் இந்த விளைவுகள் ஏற்படுகின்றன என்று உணர்ந்த அரசு, அமைதி நிலவும் பொழுது தொழிற்சங்கத் தலைவர் தேர்தலை சீக்ரட் பேலட் மூலம் நடத்தும் என்ற உத்தரவாதம் கொடுத்த பிறகும், அது அக்ரிமென்டில் இருக்கும்பொழுது, இப்பொழுது கோர்டில் இருக்கிறது என்றும், அவர்களிடமிருந்து முறையீடு வரவில்லை என்றும் கூறுவது சரியல்ல. நல்ல அமைதி நிலவும்பொழுது அந்தப் பிரச்னைகளைத் தீர்க்க வேண்டிய ஏற்பாடுகளை அரசு செய்ய முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவரவர்களே; அந்தத் தொழிற்சங்கச் சட்டம் மட்டுமல்ல, எந்தத் தொழிற்சங்கமாக இருந்தாலும் (Interim vacancies will be filled in by co-option) என்று இருக்கும். எனவே, அது புதிது அல்ல. இங்கே ஒரேயொரு தொழிற்சங்கம் இருக்கிறது. அந்தத் தொழிற்சங்கத்திலிருந்து, எங்களுக்கு முறையாக லேபர் ஆபீஸர் மூலம் சீக்ரட் பேலட்டில் தேர்தலை நடத்தி வைக்க வேண்டுமென்று அரசுக்கு முறையீடு வரவில்லை. அப்படி வந்தால் நிச்சயமாகப் பரிசீலித்து செயல்படுவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் இந்த அரசு எடுத்துக்கொள்ளும்.